# கிசோனா நிம்மதி பெருமூச்சு

கோலாலம்பூர், மார்ச் 15-
ஒலிம்பிக் போட்டியில் விளையாடும் கனவை கொண்டிருக்கின்ற மலேசிய பேட்மிண்டன் வீராங்கனை எஸ். கிசோனா இப்போது நிம்மதி பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார். கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற மணிலா சீ விளையாட்டுப் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் தங்கப்பதக்கம் வென்றார்.

பயிற்சிகளின்போது ஏற்பட்ட காயங்கள் காரணமாக கடந்த ஓராண்டு காலமாக ஓய்வில் இருந்த அவர் அண்மையில் மீண்டும் பேட்மிண்டன் அரங்கில் தீவிரம் காட்டத் தொடங்கினார்.




உலகத்தர வரிசையில் 48ஆவது இடத்தில் உள்ள அவர் தமது சொந்த செலவில் பல போட்டிகளில் பங்கேற்க முடிவு செய்திருக்கிறார். அடுத்த வாரம் நடைபெறும் சுவிட்சர்லாந்து பேட்மிண்டன் போட்டியில் அவர் பங்கேற்கிறார்.

மேலும் அடுத்தாண்டு நடைபெறும் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் விளையாடுவதற்காக தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். ஆனாலும் போதுமான பணம் இல்லாத காரணத்தினால் அவர் நிதி சுமையை எதிர்நோக்கி வருகிறார்.

இந்நிலையில் அவருக்கு 1 லட்சம் வெள்ளி நிதியுதவி வழங்க மெட்ரிக்ஸ் கான்செப்ட் ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் முன்வந்திருக்கிறது.